Registered as a News Paper
இலவச பிரதி

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-IV

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | மார்கழி–08 | 23–12–2005 | வெள்ளிக்கிழமை | ஓசை–308

உங்கள் நிறுவனங்களின் உள்ளக தொலைபேசி இணைப்புக்களுக்கு...
கிளிநொச்சியில் அதிக நிறுவனங்களுக்கு உள்ளகத் தொலைபேசி இணைப்புக்களை ஏற்படுத்தியவர்கள்.
நொதேன் ரெக்னோலஜி
பிறைவேட் லிமிட்டட்
இல:52, 2ஆம்குறுக்குத்தெரு, வவுனியா.
தொலைபேசி : 024-2221649.
இல: 20, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலை பேசி : 021-2225653(ச-13518)

# தமிழர் தாயகத்தில் இயல்பு வாழ்க்கையை உருவாக்க நோர்வே உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## ஹான்ஸ்பிரஸ்கருக்கு தமிழ்ச்செல்வன் கடிதம்

(கிளிநொச்சி)

**சிறிலங்கா இராணுவ வன்முறைகளால் தமிழர்தாயகத்தில் சீர்குலைந்து போயுள்ள இயல்பு வாழ்க்கையை மீளக்கொண்டு வர அனுசரணையாளரான நோர்வே அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று தமிழீழவிடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

சிறிலங்காவுக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிஸ்கருக்கு தமிழீழ அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் எழுதியுள்ள கடிதத்திலேயே இந்த வேண்டுகோளை அவர் விடுத்துள்ளர்.

யாழ்.குடாநாட்டில் ஏற்பட்டுள்ள கடுமையான சூழ்நிலையில் தங்களுக்கு இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்படுகிறது.

தமிழர் தாயகத்தில் பொதுமக்கள்

(IVஆம் பக்கம் பார்க்க)

## மூன்று கடற்படைச் சிப்பாய்களை மன்னார் கடலில் காணவில்லை!

(கொழும்பு)

சிறிலங்கா கடற்படை படகுகள் மீது கடற்புலிகள் நேற்று வியாழக்கிழமை காலை நடத்திய தாக்குதலில் ஒரு சிப்பாய்,படுகாயமடைந்தார். மூன்று சிப்பாய்கள் காணாமல் போயுள்ளனர் எனச் சிறிலங்கா அரசு அறிவித்துள்ளது. மன்னார் பள்ளிமுனை கடற்படை முகாமுக்கு இரவு சுற்றுக்காவல் பணியை முடித்துவிட்டு இந்தப் படகுகள் காலை 7.30 மணியளவில் திரும்பிக்கொண்டிருந்தவேளை இச் சம்பவம் இடம்பெற்றது.

இதில் கடற்படைச் சிப்பாய் எஸ்.ஜி.ரி.சஞ்சட்வ (வயது-23)படுகாயமடைந்தார்.

இத்தாக்குதல் சம்பவம் குறித்து கடற்படைப்பேச்சாளர் ஜெயந்த பெரேரா தெரிவிக்கையில்; மன்னார்கடலில் பத்திற்கும் மேற்பட்ட படகுகளில் வந்த விடுதலைப்புலிகள் இரண்டு கடற்

(IVஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.பல்கலை சூழலிலிருந்து இராணுவத்தை உடன் அகற்று!

### சிறி. சனாதிபதிக்கு கனேடிய மாணவர் சம்மேளனம் கடிதம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவத்தை யாழ். பல்கலைக் கழக சுழலில் இருந்து உடன் அகற்றுமாறு கோரி சிறிலங்காவின் சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு கனேடிய மாணவர் சம்மேளனத்தின் சார்பில், அதன் ஒன்ராரியோ மாநில பிரதிநிதி அவசர கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

ஒன்ராரியோ மாநிலத்தின் இரண்டு இலட்சத்து ஐம்பது ஆயிரம் மாணவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதி ஜெசிகிரேனார் என்பவரே இக்கடிதத்தினை அனுப்பி வைத்துள்ளார்.

கனேடிய தலைமை அமைச்சர் போல் மாட்டின் மற்றும் நோர்வே தலைமை அமைச்சர் ஜேன்ஸ் ஸ்ரொட்ல்ன்போர்க் ஆகியோருக்கும் நகல் செய்யப்பட்டு அனுப்பப்பட்டுள்ள அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், அதிகாரிகள் மீது ஒரு அமைதியான போராட்டத்தின் போது மேற்கொள்ளப்

(IIIஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.இல் இராணுவ அராஜகத்தைக் கண்டித்து கிளி.இல் பொதுஅமைப்புக்கள் கண்டனப் பேரணி

(அலுவலக செய்தியாளர்)

யாழ். புங்குடுதீவில் இளையதம்பி சிவதர்சினி மீதான பாலியல் வல்லுறவையும், அவரது படுகொலையையும், யாழ். பல்கலை சமூகத்தினர் மீதான தாக்குதலையும் கண்டித்து கிளிநொச்சி மாவட்ட பொதுஅமைப்புக்களின் ஒன்றியமும் கிளிநொச்சி மாவட்ட பெண்கள் மேம்பாட்டுப் பேரவையும் கண்டனப்பேரணி ஒன்றினை நடாத்தி கிளிநொச்சி போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளன. தமிழர் தாயகத்தில் சிறிலங்கா

(IVஆம் பக்கம் பார்க்க)



## சி. கிருஸ்ணர் நவரத்தினம் நாட்டுப்பற்றாளராகக் கௌரவம்!

நேற்று அதிகாலை யாழ் தினக்குரல் பத்திரிகை அலுவலகத்துக்கு முன்னால் தமிழ்தேசியப் பற்றாளனாக உழைத்த சின்னத்தம்பி கிருஸ்ணர் நவரத்தினம் சிறிலங்கா இராணுவப் புலனாய்வாளர்களாலும், ஈ.பி.டிபி. தேசத்துரோகக் கும்பலாலும் கோழைத்தனமாகச் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இவர் 1985ஆம் ஆண்டிலிருந்து தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு தமது பங்களிப்பை உறுதியாகச் செலுத்திவந்தார். யாழ். கோட்டையிலிருந்து சிறிலங்காப் படைகள் வெளிவராது முடக்கும் வகையில் போராளிகளுக்கான பதுங்கு குழிகள், காவலரண்கள் அமைப்பது முதலிய செயற்பாடுகளில் தமது பிரதேச மக்களை ஒருங்கிணைத்து செயற்பட்டவர்.

நெருக்கடியான சந்தப்பங்களில் சளைக்காது அரசியல் பணிகளில்

(IVஆம் பக்கம் பார்க்க)

## சேதமடைந்த படகுகளுடன் கடலில் இறந்த சிப்பாய்கள் மூழ்கிவிட்டனர்

### –மன்னார் சம்பவத்தை விபரித்து கண்காணிப்புக்குழுவிற்கு புலிகள் கடிதம்

(மன்னார்)

மன்னார் கடற்பரப்பில் நேற்று அதிகாலை இடம்பெற்ற மோதல் சம்பவம் குறித்து தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் கண்காணிப்புக்குழுத் தலைவர் ஹக்ரப்ஹொக்லண்டிற்கு விபரமாகக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

நேற்று அதிகாலையில், மன்னார் கடலில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக முழுமையான விபரங்களை வழங்குவதற்காக இக்கடிதத்தினைத் தங்களுக்கு எழுதுகின்றேன்.

சிறிலங்கா கடற்படையினரின் தாக்குதலுக்கு உள்ளான எமது படகுகள் தாமதமாகவே கரையை வந்தடைந்தாலும், இத்தாக்குதலில் உயிர்தப்பிய எமது அங்கத்தவர்களிடமிருந்து முழுமையான விபரங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டி

(IVஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் நிலையம் மீது தாக்குதல்

(கொடிகாமம்)

கொடிகாமம் பொலிஸ் நிலையம் மீது நேற்று மாலை 6.30 மணியவில் கைக்குண்டுத் தாக்குதல் நடைபெற்றுள்ளது.

இரண்டு கைக்குண்டுகள் பொலிஸ நிலையத்திற்குள்ளும், இரண்டு கைக்குண்டுகள் காவல் நிலையிற்குள்ளும் வீழ்ந்து வெடித்துள்ளன. இதனைத்தொடர்ந்து பொலிஸ் நிலையம் மீது துப்பாக்கிப்பிரயோகம் நடைபெற்றதாகவும் பொலிசார் பதில் தாக்கு

(IVஆம் பக்கம் பார்க்க)

## யாழ். இல் நேற்று 11 தாக்குதல்கள்; நான்கு இராணுவத்தினர் காயம்

### படையினரின் அடாவடியில் ஐந்து பொதுமக்கள் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று வியாழக்கிழமை மாலைவரை படையினர் மீது 11 தாக்கு தல்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்தத்தாக்குதல்களில் சிறிலங்காப் பொலிசார் ஒருவரும் படையினர் நால்வரும் இராணுவம் தாக்கியதில் பொதுமக்கள் ஐந்து பேரும் படுகாயமடைந்துள்ளனர்.

யாழ்.புறநகர்ப்பகுதி நல்லூர் முத்திரைச்சந்தி ,நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவிலடி, அச்சுவேலி, கந்தர்மடம் சந்தி,நாச்சிமார் கோவிலடி, கோப்பாய், அரியாலை,நெல்லியடி, பருத்தித்துறை ஆகிய பகுதிகளில் இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

நல்லூர் முத்திரைச் சந்தியடியில் மாலை 6.00 மணியளவில் சிறிலங்கா படையினர் காவலுக்கு நின்றிருந்தபோது அவர்கள் மீது அடையாளம் தெரியாதோர் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

யாழ்.நகர் ஐந்து சந்திப்பகுதியில் இந்துக் கல்லூரிக்கும், பன்றிக் குட்டிப்பிள்ளையார் கோயிலுக்கும் இடையே இராணுவவாகனம் மீது

(IVஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

**Microsoft Front Page**

வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
தொடர்புகட்கு:
வின்நெற் கணனிபயிற்சி நிலையம்
டிப்போவீதி, கிளிநொச்சி.
(சி-13074)

### விற்பனைக்குண்டு

5ஆம் கட்டை, அளம்பில் முல்லைத்தீவில் 49 ஏக்கர் தென்னந் தோட்டக்காணி விற்பனைக்குண்டு. தொடர்புக்கு:- காந்திமதி சிதம்பரப்பிள்ளை மே/பா. சி.சிவசுப்பிரமணியம் 5ஆம் வட்டாரம், இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு. (6967)

### காணி விற்பனைக்குண்டு

திருநகர் வடக்கு ஏ-9 வீதியில் இருந்து 1 1/2 கிலோ மீற்றர் தூரத்தில் 1/4ஏக்கர் உறுதிக்காணி விற்பனைக்கு உண்டு தொடர்பு:- செல்வம் கராஜ்(சிறி) (வலயக் கல்விப் பணிமனை முன்பாகக் கிளிநொச்சி)
தொ.பே.0773526955
0776728604 (7171)

### ஆங்கிலப்பேச்சு வகுப்பு ஆரம்பம்

இது O/L பரீட்சை
எழுதியவர்களுக்கான வகுப்பு.
ஆசிரியர் - இ. றஜித்
காலம் - 28-12-2005
நேரம் - காலை 9.00 மணி
இடம் - வைத்தியசாலை அருகில்
முல்லைத்தீவு வீதி,
புதுக்குடியிருப்பு. (6970)

## கணனி அன்பளிப்பு வைபவம்

மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் சுவிஸ் கிளை பழைய மாணவர்களால் எமது பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட ஒரு தொகை கணனித் தொகுதிகள் கையளிக்கும் வைபவம் இடம்பெறவுள்ளது.

இடம் : மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் கணனி ஆய்வுகூடம்
காலம்: 24–12–2005 சனிக்கிழமை
நேரம் : காலை 10.30 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.
(6968)

## 5ஆம் ஆண்டில் உங்களுடன்



பிறப்பு: 19 – 04 – 1928
இறப்பு: 23 – 12 – 2000

### அமரர் உயர்திரு. சின்னையா சிவலிங்கம்

(ஓய்வு பெற்ற புகையிரதசாரதி)

ஆண்டுகள் ஐந்து ஆனதையா
ஆனாலும் மாநாமுகமும் நினைவும்
எம்முடன் என்றும் வாழும்

மருமகள்:
லோ. கவிதா,
(ஆசிரியர் - மு/அ. த. க.
பாடசாலை) (7093)

உங்கள் நினைவுடன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்,

## "தேடல் அறிவோர் ஒன்று கூடல் ஆய்வரங்கு"

இடம் :- மல்லாவி நுண்கலைக்கல்லூரி கேட்போர் கூடம்
காலம் :- 24-12-2005 சனிக்கிழமை மாலை 3.00 மணி

தலைப்பு
"குழந்தைக் கல்வியியலில் கலை"

நிகழ்த்துபவர் :- திரு. அருணாசலம் அவர்கள்
(உதவிக் கல்விப் பணிப்பாளர், ஆரம்பக் கல்வி முல்லை வலயம்)

அறிவோர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

நிர்வாகம்,
மல்லாவி நுண்கலைக்கல்லூரி
(சி-13598)

## 31 ஆம் நாள் நினைவலைகள்



மண்ணில்: 09 – 06 – 1940
விண்ணில்: 24 – 11 – 1940

### அமரர்.சின்னத்துரை கனகராசா (வாத்தியார்)

தண்ணீரூற்று முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவருமாகிய சின்னத்துரை கனகராசா 24.11.2005 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 23.12.2005 இன்றும் 24.12.2005 அன்று நிகழும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:–
மகன் க. சுகந்தன் (மட்டக்களப்பு),
மருமக்கள்.க. கௌரிதாசா, சு. இரகுநாதன்.

தண்ணீரூற்று,
முள்ளியவளை.
(6969)

## முதலாம் ஆண்டு நினைவினில் நாம்



கிறிஸ்ரி பெனாண்டோ
ஷண்பகா
1996-06-24



கிறிஸ்ரி பெனாண்டோ
மேரி அஞ்சலீனா
1970-04-06



கிறிஸ்ரி பெனாண்டோ
ஜதுஷாந்
1997-11-04



வில்வராசா
சஞ்சிகா
1995-09-18

அப்பா தனிமை என்று எண்ணி

துணையாய் எனை விட்டீர்களா அம்மா!
நீங்கள் தனிமை என நினைத்தோ
என்னருமைச் சகோதரிகள் சுஜி, புவியையும் கூடவே
அழைத்துச் சென்றீர்களா அம்மா!
ஷண்பகா, ஜது
அம்மாவையும் அணைத்தபடி
ஆழிப்பேரலையில் சென்று நீங்கள்
அப்பாவை மட்டும் அலறவிட்டு சென்றதேன்.

சஞ்சிகா
ஆண்டின் இறுதியிலே
ஆண்டவனை வேண்டவென
அனுப்பிய உன்னைக்கூட
ஆழிப் பேரலை விட்டு விடவில்லையா?
காற்று வாங்கி வந்த கடல்
காலனாய் உங்களுக்கு வரும் என
கனவில் கூட நினைக்காமெல்
நினைவாலயம் அமைத்து விட்டீர்களே.

24-12-2005 அன்று எமது தற்காலிக இல்லத்தில் நடைபெறும் இவர்களின் ஆத்ம சாந்தி வழிபாட்டிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.



பாலசுப்பிரமணியம்
சுஜிதா
1988-08-05



பாலசுப்பிரமணியம்
மேரி எலன் சீற்றா
1963-10-23



பாலசுப்பிரமணியம்
புவிதா
1995-09-18

என்றும் உங்கள் நினைவுடன்
கிறிஸ்ரி பெனாண்டோ
வில்வராசா (பிரபு)
குடும்பத்தினர்,

கோயிற்குடியிருப்பு த.முகாம்,
இல.69,
கரைச்சிக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.
(சி-13618)

# கங்கைஅமரன் பயிற்சிப்பாசறையின் 6ஆவது அணி பயிற்சி முடித்து வெளியேற்றம்

கங்கை அமரனின் பயிற்சிப் பாசறை தற்காப்பு பயிற்சியினை பெற்ற 06ஆவது படையணியின் பயிற்சி நிறைவுநிகழ்வு நேற்றுமுன்தினம் மருதங்கேணியில் நடைபெற்றுள்ளது. நேற்றுமுன்தினம் பி.ப 3:00 மணியளவில் தொடங்கிய நிகழ்வில் பொதுச்சுடரினை தயாரிப்பாளர் வீரா, தமிழீழதேசியத்தொலைக்காட்சி நிறுவனப்பணிப்பாளர் தவா ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து துணைப்படை போராளிகளுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இவர்களுக்கான பரிசில்களை தமிழீழவிடுதலைப்புலிகளின் கடற்படையின்





தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்படையின் சிறப்புத் தளபதி கேணல் சூசை ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழகடற்படையின் தளபதிகளில் ஒருவரான பகலவன் ஏற்றிவைத்தார்.

அதனைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்படையின் துணைப்படையினரின் அணிவகுப்பு நிகழ்வுகளும், தற்காப்பு பயிற்சி நிகழ்வுகளும் இடம் பெற்றன. நேற்று முன்தினம் வடமராட்சி வடக்கு இன்பருட்டியைச் சேர்ந்த 110 பேர் கொண்ட மக்கள் குழுவே பயிற்சியினை நிறைவு செய்து வெளியேறியுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்புரையினை தமிழீழவிடுதலைப் புலிகளின் கடற்படையின் சிறப்புத்தளபதி கேணல் சூசை அவர்களும், தமிழீழ தேசிய தொலைக்காட்சி நிகழ்ச்சித் சிறப்புத் தளபதிகேணல்சூசை அவர்கள்வழங்கிக் கௌரவித்தார். இத்துடன் நிகழ்வின் இறுதியில் ஊடகவியலாளர் களுக்கு விடுதலைப்புலிகளின் முக்கிய போராளிகள் கருத்துக்களைத் தெரிவித்தனர். வடமராட்சி வடக்கு இன்பருட்டி மக்கள் 110பேர் கொண்ட அணியினர் தமது இராணுவப் பயிற்சியை முடித்துக்கொண்டு தங்களுடைய பிரதேசத்திற்குச் செல்கின்றனர். இப்பயிற்சி தமிழீழ கடற்படையின் தளபதியான விநாயகம் தலைமையில் நிறைவேறியது. அடுத்த அணியினர் இராணுவப் பயிற்சியினைப் பெறுவதற்குத் தயாராக வுள்ளனர். யாழ்ப்பாணத்தில் நடைபெறும் சிங்கள இனவாதிகளால் ஏற்படும் பிரச்சினைகள் பற்றியும் தற்காப்புப்படையணிக்கு இப்பயிற்சியின் முக்கியத்துவம் பற்றியும் புலிகளின்குரல் பொறுப்பாளர் தமிழன்பன் கருத்துரைத்தார்.

# மறவர் படையின் மாணவர் அணி படையினரின் அராஜகத்திற்கு கண்டனம்

(மன்னார்)

தமிழ்க் கல்விச் சமூகத்தின் மீதானதும், பொதுமக்கள் மீதானதுமான சிறிலங்காப் படைகளின் தாக்குதலை மன்னார் மண் மீட்கும் மறவர் படையின் மாணவர் அணி வன்மையாகக் கண்டித்து அறிக்கை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

புங்குடுதீவில் இளம்பெண் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டமை, பல்கலை மாணவர் சமூகம் மீதான தாக்குதல், பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் என்பனவற்றால் யாழ்ப்பாணத்திலுள்ள மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கப்பட்டுள்ளன. இது தவிர கல்விச் சமூகத்தின் இதயமான பல்கலைக்கழகத்தின் மீது இராணுவம் தாக்குதல் நடத்தியது மாணவர் சமூகமான எம்மை ஆவேசமடையச் செய்துள்ளது. இப்படியான வன் முறைகளை நாம் இனியும் பொறுத்துக்கொள்ள மாட்டோம். மாணவர் சமூகம் போர்ப்பயிற்சி பெறுவதற்கும் தூண்டியுள்ளது எனவும் மன்னார் மண்மீட்கும் மறவர் படையின் மாணவர் அணிவிடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (18)

# அவசரகாலச் சட்டம் வாக்கெடுப்பின்றி நீடிப்பு!

(கொழும்பு)

சிறிலங்கா அரசு பாராளுமன்ற வாக்கெடுப்பை நடத்தாமலேயே அவசரகாலச்சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடித்துள்ளது.

சிறிலங்கா பாராளுமன்றம் உரிய நேரத்துக்கு முன் கூட்டியே நேற்று முன்தினம் மாலை கூட்டப்பட்டதால் அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்தில் தமிழ்தேசியக் கூட்டமைப்பினரும் பங்கேற்க இயலவில்லை.

சிறிலங்கா சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தமிழ்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்துக் கலந்துரையாடலை நடத்திக்கொண்டிருந்த போது சிவாஜிலிங்கம், ஈழவேந்தன் ஆகியோர் இடையில் புறப்பட்டு பாராளுமன்ற விவாதத்துக்கு வந்துள்ளனர். ஆனால் உரிய நேரத்துக்கு முன்பாகவே பாராளுமன்றம் கூட்டப்பட்டு வாக்கெடுப்பு ஏதுமில்லாமல் அவசர காலச்சட்டம் நீடிக்கப்பட்டுள்ளது. (32)

## யாழ். பல்கலை....

பட்ட தாக்குதல் குறித்த எமது கரிசனையை உங்களுக்கு தெரிவிக்கின்றோம். யாழ். மாணவர் அலுவலகங்கள் கடந்த இரண்டு வாரங்களாக இராணுவ கண்காணிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகவும், பல மாணவர்கள் விசாரணைக்குள்ளாக்கப்பட்டு அவர்களின் அடையாள அட்டைகள் பறிக்கப்பட்டதாகவும் அறிகின்றோம்.

கருத்துக்களை சுதந்திரமாக வெளியிடுவது அடிப்படை மனித உரிமை. மாணவர்கள் சுதந்திரமாகக்கல்வி கற்பதற்கும், கருத்துக்களை வெளியிடுவதற்குமான பாதுகாப்பான சூழலை ஏற்படுத்தும் வகையில், யாழ். பல்கலைக்கழக சூழலை விட்டு இராணுவத்தை உடன் அகற்றுவது மட்டுமன்றி, கல்வி கற்றலுக்கான மாணவர்களின் அனைத்துத் தேவைகளையும் உடன் பூர்த்தி செய்யுமாறும் உங்களை வேண்டுகின்றோம். பெரும் பான்மையாக தமிழ் மாணவர்களைக் கொண்ட வவுனியா பல்கலைக்கழக மாணவர் சமூகத்தின் பல்வேறு தேவைகள் இதுவரை பூர்த்தி செய்யப்படாமையையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.வடபகுதி மாணவர்கள் மீது தொடரும் வன்முறைகள் குறித்து வரும் செய்திகள் அனைத்தும் உண்மையானால், அதன்பால் அனைத்துலக கவனம் திருப்பப்பட வேண்டியது அவசியம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

நான்கு ஆண்டுகளிற்கு முன்னரும் யாழ். பல்கலைக்கழக சமூகத்தின் மீது இராணுவ நெருக்குவாரங்கள் ஏற்படுத்தப்பட்டன.

ஆனால் "நெருக்குவாரங்கள் தணிந்து புரிந்துணர்வு வரும் என்று எதிர்பார்த்த எங்களுக்கு தற்போது வரும் செய்திகள் ஏமாற்றம் அளிப்பதாகவும், இது குறித்து உங்கள் அரசின் கண்டனத்தையும், வன்முறைகளை நிறுத்து வதற்கான உறுதியான நடவடிக்கைகளையும் வேண்டி நிற்கின்றோம். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது." கனேடிய மாணவர் சம்மேளனம், கனடாவில் உள்ள மாணவர்கள் அனைவரையும் அதன் பத்து மாநிலங்களிலும் பிரதி நிதித்துவப்படுத்தும் ஒரே ஒரு அமைப்பு என்பது இங்கு நினைவில் கொள்ளத்தக்கது.

# இராணுவ அராஜக செயற்பாடுகள் குறித்து பல பொதுஅமைப்புக்கள்கண்டனம்!

**-காட்டுமிராண்டித்தனமான செயல் எனக்குற்றச்சாட்டு**

நாட்டில் அண்மைக்காலமாக நடைபெற்று வரும் இராணுவ நடவடிக்கைகள் ஓர் உள் நோக்கத்தைக் கொண்டதா என எண்ணத் தோன்றுகிறது. அகிம்சைப் போராட்டத்தை ஆயுதம் கொண்டு அடக்கத் தலைப்படும் படையினரின் செயற்பாட்டை வன்மையாகக் கண்டிக்கின்றோம். இவ்வாறு கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்தவிற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இக்கடிதம் கல்வியமைச்சின் இணைச்செயலாளர் பண்டாரவிடம் கையளிக்கப்பட்டது. கல்வியமைச்சில் திங்கட்கிழமை தமிழர் ஆசிரியர் சங்கத்துடனான சந்திப்பு நடைபெறவிருந்தது.

வரவு செலவுத் திட்ட விவாதம் காரணமாக அமைச்சருடனான சந்திப்பு 27ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக அவரின் இணைச்செயலாளர் பண்டார கூறினார்.

இதனையடுத்து சங்கப் பொதுச் செயலர் த. மகாசிவம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர், மாணவர்கள், ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்ட சம்பவத்திற்கு வன்மையான கண்டனத்தைத் தெரிவித்து அமைச்சருக்கு அறிக்கை ஒன்றையும் சமர்ப்பித்தார்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் காவலரண் அமைத் தமை, புங்குடுதீவில் இளம் பெண் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுக் கொலை செய்து கிணற்றில் போடப்பட்டமை போன்றவற்றைக் கண்டித்து அகிம்சை வழியில் உரிமைகேட்டு போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் சென்ற யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்டோரை மறித்துத் தாக்கி காயப்படுத்தியமை போன்ற பல அராஜக செயற்பாடுகள் பல அரங்கேறி வருகின்றன. இவை நாட்டில் ஆரோக்கியமான சூழலை ஏற்படுத்தமாட்டாது என அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை வவுனியா மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகச் சமூகத்தின் அகிம்சை வழியிலான அமைதிப் போராட்டத்தை நசுக்க முற்பட்ட இராணுவத்தின் அடாவடித் தனத்தையும் அநாகரிகமான செயலையும் நாம்மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் தமிழர் தாயகத்தின் தாய்ப்பல் கலைக்கழகம்,தமிழர்களின் கல்விச் சமூகத்தினரையும் முதுசமான கல்வியையும் வழங்கும் அதி உன்னத மரியாதைக்குரிய கல்விச் சாலை மீது இராணுவம் மேற்கொண்ட காட்டுமிராண்டித் தனமான அருவருப்பான செயலை நாம் கண்டிக்கின்றோம்.

வவுனியா மாவட்ட மாதர்சங்கங்களின் ஒன்றியம் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில்; புங்குடுதீவில் இளம் தமிழ்ப்பெண் ஒருவர் சிறிலங்கா இராணுவத்தினரால் மிலேச்சத்தனமான முறையில் உடலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி கொலைசெய்யப்பட்ட சம்பவத்தை மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

சிறிலங்கா அரசும் அதனது இராணுவமும் தமிழர் தாயகத்தின் மீது அடக்கு முறையை கலாச்சாரத்தின் ஒரு வடிவமாக காலம் காலமாக தமிழ்ப்பெண்மீது வன்புணர்ச்சியைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. இது சமாதான காலத்திலும் மேற்கொள்ளப்பட்டு வருவதைப் பெண்களமைப்புக்கள் மிக வன்மையாகக்கண்டிக்கின்றன.

தமிழர் பிரதேசமெங்கும் இராணுவத்தின் முகாம்கள் இருப்பதும், காவலரண்கள் அமைக்கப்பட்டிருப்பதும், பாடசாலைகள், பொதுக் கட்டடங்கள் முகாம்களாக்கியிருப்பதும்,யுத்தநிறுத்த ஒப்பந்தத்துக்கு முரணான செயற்பாடுகளாகும். இதுவே பெண்கள் மீதான உடலியல், உளவியல் துன்புறுத்தலுக்கு அடிப்படைக்காரணங்களாகும். எனவே தமிழர் தாயகப் பிரதேசங்களிலிருந்து சிறிலங்கா இராணுவம் உடனடியாக வெளியேறவேண்டும்.

யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக முது கல்வியியல் மானிப் பட்டப்படிப்பு மாணவர்சங்கம் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில்;

யாழ்ப்பாணக்கல்விச்சமூகத்தின் மீதும், மாணவர்கள் மீதும் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள இராணுவ அடக்கு முறைகளையும், அடாவடித் தனங்களையும் மிகமிக வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

1974 ஆம் ஆண்டு முதல் இயங்கும் எமது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு ஒரு பண்பாட்டுப்பாரம்பரியம் உண்டு. அதனைக்களங்கப்படுத்தும் விதத்தில் கடந்தசில நாட்களாக இராணுவம் நடந்து கொண்டது எமக்கு மிகவும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

சிறிலங்கா இராணுவம் செய்யும் இத்தகு அடாவடித்தனங்களைக் கண்டுகொண்டு பண்பாட்டு மௌனிகளாக தமிழ்ச்சமூகம் இருக்காது என்பதை சிறிலங்கா அரசுக்கும், இராணுவத்தலைமைக்கும் அறியத் தருகின்றோம் என எச்சரிக்கை விடப் பட்டுள்ளது.

# தமிழீழ மருத்துவக்கல்லூரி மாணவர்களின் மருத்துவ நுண்ஆய்வுப் பட்டறை

(அலுவலகசெய்தியாளர்)

தமிழீழ மருத்துவக்கல்லூரி மாணவர்களின் "மருத்துவ நுண்ஆய்வுப்பட்டறை" நேற்றுமுன்தினம் கிளிநொச்சி திட்டமிடல் செயலகத்தில் நடைபெற்றது.



குழந்தை மருத்துவப் பேராசிரியர் ஜோன்வைற்கால் அவர்களின் மேற்பார்வையில் இருதய சிகிச்சை நிபுணர் மனமோகன் தலைமையில் நடைபெற்ற ஆய்வுப் பட்டறையில்;

01) போசாக்கின்மைக்கும், குழந்தைகளின் சிறுநீரகப் பருமனிற்கும் இடையிலான தொடர்பு.

02) கிளிநொச்சி மாவட்டத்தில் பாம்புகளின் பரம்பலும் பாம்புக் கடியும் சிகிச்சையளிக்கப்பட்ட முறையும்.

03) சுனாமியினால் சிறுவர்களுக்கு ஏற்பட்ட உளவியல் பாதிப்புக்களும் அதற்கு உளவள துணை சிகிச்சை முறைகளால் ஏற்பட்ட முன்னேற்றங்கள்.

04) வீதி விபத்துக்களும், நஞ் சூட்டலும் இதற்கான காரணங்களுடன் ஆராயப்பட்டு அதன் தீர்வுக்கான வழிகள் முன்மொழிவு.

05) கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட கர்ப்பிணித்தாய்மார்களின் உடல்நிறை, உயரம், குருதி அமுக்கம் ஆகிய அளவீடுகளுக்கும், குழந்தைகளின் பிறப்பு நிறைக்கிடையிலான தொடர்பு குறித்த தலைப்புகளில் தமிழீழ மருத்துவக் கல்லூரி மாணவர்களினால் ஆய்வுகளின் முடிவுகள் ஆய்வுப்பட்டறையில் முன்வைக்கப்பட்டன.இந்நிகழ்வில் தமிழீழ மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் ரேகா, தமிழீழ சுகாதார சேவைப் பொறுப்பாளர் ஓவியன், நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனப்பணிப்பாளர் ரட்ணம், பற்சிகிச்சை நிபுணர் வாசுகி மற்றும் அரச அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் கலந்துகொண்டமைகுறிப்பிடத்தக்கது. (சோ,தீ,கு)

## சி.கிருஸ்ணர்...

துணிவுடன் ஈடுபட்டவர். இவரது விடாப்பிடியான கடுமையான உழைப்பு, மக்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வாக பரிணமித்தது. 1995இல் யாழ். இடப்பெயர்வைத் தொடர்ந்து வன்னிப் பிரதேசத்தில் வசித்தபோது சிறிலங்காப் படைகளை எதிர்த்து நின்ற எல்லைப் படைவீரனாக களம் கண்டவர், போர் எழுச்சிக்குழுவின் சிறந்த நிர்வாகியாக ஆளுமையை வெளிப்படுத்தியவர்.

போர்நிறுத்த உடன்படிக்கையின் பின்னர் யாழ். திரும்பிய இவர், பிரதேச மக்களின் தேசிய உணர்வெழுச்சியை மழுங்கடிப்பதற்காக தேசவிரோத கும்பல்களது அடிவருடிகள், சமூக சீர்கேடுகளைப் புகுத்த முனைந்தபோது தேசிய எழுச்சிப் பேரவையூடாக அயராது உழைத்து மக்களுக்கு விழிப்புணர்வூட்டி வெற்றி கண்டவர். அண்மைக்காலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் யாழ்.மாவட்டத்தில் இருந்து விலகியபொழுது தேசவிடுதலைப் போராட்டப் பணிகளில் முழுமையாக ஈடு பட்டவர். சிறிலங்கா இராணுவ புலனாய்வுவாளர்களாலும், ஒட்டுப்படைகளாலும் ஆபத்து உள்ளதை அறிந்திருந்தும் உள்ளார்ந்த இவரது தேசவிடுதலைக்கனல் தணியவில்லை கொழுந்து விட்டு எரிந்தது.

2005ஆம் ஆண்டு மாவீரர்தின நிகழ்வுகள் மக்களால் ஒழுங்குபடுத்தப்பட்டு சிறப்புடன் நடைபெற்ற போது அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் தளராது தொடர்ந்து பணி செய்தார்.

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டமானது எல்லா ஏற்றத் தாழ்வுகளையும் களைவதற்கான சமூக மாற்றத்தையும் உள்ளடக்கியது என்ற தெளிவுடன் இயங்கியவர்.

எனவேதான் சகல தளைகளிலும் இருந்து சமூகத்தை விடுவிப்பதற்கான ஆர்வலனாக விளங்கினார் சி.கி நவரத்தினம். அரசாங்க ஊழியராக இருந்தபோதும் தேசிய விடுதலை உணர்வுக்கு தடையேற்பட இடம்கொடுக்காது, விடுதலைப் பணிகளை செம்மையாக சமூகப் பொறுப்புடன் நிறைவேற்றினார்.

தேசவிடுதலையை உயிர் மூச்சாகக் கொண்டு செயற்பட்ட சின்னத்தம்பி கிருஸ்ணர் நவரத்தினத்துக்கு நாட்டுப்பற்றாளர் நிலை வழங்கிக் கௌரவிக்கின்றோம். இவருக்கு எமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்எனத் தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறையினர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளனர்.

## பொலிஸ்....

தல் நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவத்தில் சில பொலிசார் கொல்லப்பட்டும் பலர்காயமடைந்திருக்கலாமென ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இத்தாக்குதலைத் தொடர்ந்து கொடிகாமம் நகர்ப்பகுதி சிறிலங்கா இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதலுக்குள்ளாக்கப்பட்டது. இதன்போது வர்த்தக நிலையங்களில் பணியாற்றுவோர். வீதியில் பயணித்தோர் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியுள்ளனர். அத்தோடு கொடிகாமநகர் இராணுவமுகாமிற்கு மேலதிக படையினர் குவிக்கப்படுகின்றனர். (28)

## யாழ்இல் இராணுவ....

பேரினவாதத்தினதும். அதன் ஒட்டுப் படைகளினதும் அராஜக செயல்களின் வெளிப்பாடாக அண்மைய நாட்களாக நடைபெற்றுவரும் இராணுவ அடாவடித்தனங்களைச் சர்வதேச சமூகத்திற்கு வெளிக்காட்டும் முகமாகவும், யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் மீது தொடர்ந்து தாக்கப்பட்டு வரும் காட்டுமிராண்டித்தனமான செயற்பாடுகளையும் கண்டித்து யாழ்ப்பாணத்திலிருந்து இராணுவம் வெளியேற வேண்டும் என்பதையும் வலியுறுத்தியே இந்தக் கண்டனப் பேரணி நேற்றுக்காலை 11.00 மணிக்கு நடைபெற்றது.

இக்கண்டனப் பேரணியானது மாவட்ட செயலகத்திலிருந்து மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகன் தலைமையில் ஏ-9 வீதியூடாக கிளிநொச்சி போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு செயலகத்தை வந்தடைந்தது.

இதன்போது தமிழிலும்,ஆங்கிலத்திலும் எழுதப்பட்ட பதாகைகள், சுலோகங்கள் என்பனவற்றையும் தாங்கியவாறு 3000இற்கும் மேற்பட்ட மக்கள் ஒருமித்து தமது உரத்த குரலை வெளிப்படுத்தியவாறு கண்காணிப்புக் குழு செயலகத்தை வந்தடைந்தனர்.

அங்கு கண்காணிப்புக் குழுத்தலைவர் முன்னிலையில் பொதுஅமைப்புக்களினதும், பெண்கள் மேம்பாட்டுப் பேரவையினதும் மகஜர்கள் வாசிக்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச்செயலாளர் சு.பசுபதிப்பிள்ளை பொதுஅமைப்புக்களின் மகஜரை கண்காணிப்புக் குழுத்தலைவரிடம் கையளித்தார்.

இதேபோன்று பெண்கள் மேம்பாட்டுப் பேரவை மகஜரை கிளிநொச்சி மாவட்ட பெண்கள் மேம்பாட்டு பேரவைத்தலைவி திருமதி சி. செல்வராணி கையளித்தார்.

இந்தக் கண்டனப் பேரணிக்கு கிளிநொச்சி அரச, அரசசார்பற்ற ஊழியர்கள், வர்த்தக சங்கத்தினர் ஏனைய பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு தமது உரத்த கண்டனத்தைத் தெரிவித்துள்ளனர். (கு.தீ)

## மூன்று....

படைப் படகுகள் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். இதனையடுத்து கடற் படையினரும் திரும்பித்தாக்கினர். இதில் ஒரு சிப்பாய் காயமடைந்ததோடு மூவர் காணாமல்போயுள்ளனர்.

## சேதமடைந்த...

யிருந்ததாலும் எம்மால் உரிய நேரத்தில் இச்சம்பவம் தொடர்பான தகவலைத் தரமுடியாமற்போய்விட்டது. எமது மூன்று படகுகள் மன்னார் கடலில் பயணித்துக்கொண்டிருந்த வேளையில் அப்படகுத் தொகுதியினை வழிமறித்த சிறிலங்கா கடற்படை அதன் மீது தாக்குதலை ஆரம்பித்தது. இதனால், தற்காப்புக்காக எமது போராளிகள் திரும்பத் தாக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. கடற்படைப் படகுகள் பின்வாங்கிச் சென்றபோது, ஒரு படகு தரித்து நிற்பதை எமது போராளிகள் அவதானித்தார்கள். அப்படகு நகராமல் நின்றமையினால், அப்படகை அண்மித்த எமது போராளிகள், அப்படகில் ஏற்பட்ட சேதம் காரணமாக அப்படகு கடலில் மூழ்கிக் கொண்டிருந்ததையும், அதில் இரண்டு படையினர் இறந்திருந்ததையும், ஒரு படை வீரர் கடுமையான காயங்களுக்கு உள்ளாகிய நிலையிலும் இருப்பதைக் கண்டார்கள். மூழ்கிக்கொண்டிருந்த கடற்படையின் படகினையும் அதிலிருந்த சடலங்களையும் கைவிட்டுவிட்டு, காயமடைந்த படை வீரரைக் காப்பாற்றுவதற்குத் தீர்மானித்த எமது போராளிகள், ஏற்கனவே கடற்படையின் தாக்குதலால் சேதமடைந்திருந்த எமது படகில் அவரை ஏற்றினார்கள். கடற்படையினரின் தாக்குதலால் கடுமையாகச் சேதமடைந்திருந்த எமது படகில் வேகமாக நீர் புகத்தொடங்கியதுடன், காயமடைந்திருந்த அப்படை வீரருடன் அப்படகு இறுதியில் மூழ்கிப்போனது.

எமது போராளிகள் காயமடைந்திருந்த தம்முடைய போராளி ஒருவருடன் ஒருவாறாக நீந்தி, மாலையிலேயே எமது பகுதியினை வந்தடைந்தார்கள். அவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளின்போதே மேற்குறிப்பிட்ட இத்தகவல்கள் பெறப்பட்டன. இதற்கிடையில், புலிகள் மூன்று கடற்படையினரைக் கடத்திவிட்டதாக சிறிலங்கா அரசாங்கம் கண்காணிப்புக் குழுவிற்கும், ஊடகங்களுக்கும் விரைவாக அறிவித்தது. கடற்படையின் படகில் இருந்த மூன்று கடற்படையினரும் கடலில் மூழ்கிவிட்டதை எமது போராளிகள் உறுதிப்படுத்துகின்றனர்.

இது தொடர்பில் முன்னர் ஏற்றுக்கொள்ளப்பட்ட புரிந்துணர்விற்கமைவாக தரையிலும், கடலிலும் எமது அங்கத்தவர்கள் பயணம் செய்வதற்கான ஒழுங்குகளை ஏற்படுத்தித் தரும்படி நாங்கள் மீண்டும் மீண்டும் கேட்டுக்கொண்டதை இங்கு குறிப்பிடுவது முக்கியமானதாகும்.

மேலும் எமது போராளிகள் தற்காப்புக்கான ஆயுதங்களை வைத்திருப்பது அவசியமானது. எதிர்காலத்தில் இயல்பான பயணத்திற்கு உத்தியோகபூர்வமான ஏற்பாடுகளை செய்து தருமாறு கோருகின்றோம். இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறாது தவிர்ப்பதற்கு உத்தியோகபூர்வமான நடவடிக்கையை காலந்தாழ்த்தாது எடுக்க வேண்டும்என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தமிழர்....

மீதான இராணுவ வன்முறைகள் அதிகரித்து வருகின்றன. இராணுவத்தின் அதியுயர் பாதுகாப்பு வலயமாக உள்ள பகுதியில் சிறிலங்கா கடற்படையால் இளம்பெண் கடத்தப்பட்டு, கொடூரமாக பாலியல்வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு மருத்துவ அறிக்கையிலும் உறுதி செய்யப்பட்ட நிலையில் நிலைமை மோசமடைந்தது. அந்த இளம் பெண்ணைக் கொடூரமாகப் படுகொலை செய்து பாழடைந்த கிணறு ஒன்றில் கல்லைக் கட்டி வீசியுள்ளனர் கடற் படையினர் இந்தச் சம்பவமானது செம் மணிபுதைகுழி கிருசாந்திபடுகொலை போன்றவற்றை தமிழ் மக்களுக்கு நினைவூட்டியுள்ளது.

பெண்கள் உள்ளிட்டோரின் பாதுகாப்புக் குறித்து ஆழ்ந்த கவலை எம்மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. போர்க் காலங்களில் இராணுவ ஆக்கிரமிப்பாளர்கள் ஒரு தேசத்தினது மக்களுக்கு எதிராக நிகழ்த்துகிற குற்றச்செயல்களாக இவை இருக்கின்றன. சமாதான காலத்திலும் கூட மக்களின் இயல்பு வாழ்க்கை மறுக்கப்பட்டு மேலதிக படைகள் குவிக்கப்பட்டு இராணுவ வன்முறைகள் அதிகரித்துள்ளமையானது மக்களிடையே பீதியான உணர்வை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ் மக்கள் மீதான திட்டமிட்ட தொடர்ச்சியான தாக்குதல்களையும் சித்திரவதைகளையும் இராணுவம் மேற்கொண்டு வருகிறது. தமிழ் கல்வியாளர்கள் மற்றும் கல்விச் சமூகத்தினரை சிறிலங்கா இராணுவத்தினர் மிகக் கீழ்த்தரமாக நடத்தியுள்ளனர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத் துணைவேந்தர் எஸ்.மோகனதாஸ் விரிவுரையாளர்கள், போராசிரியர்கள், மாணவர்களைத் தாக்கியும் துப்பாக்கிச்சூடு நடத்தியும் சிறிலங்கா இராணுவம் பதற்றமான சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. யாழ்ப்பாணத்தில் கட்டுப்படுத்த முடியாத அமைதியற்ற சூழலை இச் சம்பவம் ஏற்படுத்தியுள்ளது. இந்த முழுச் சம்பவங்களுக்கும் சிறிலங்கா இராணுவமே பொறுப்பு.

இது விடயத்தில் நோர்வே உடனே தலையிட்டு மக்கள் மீதான இராணுவ வன்முறைகள், தாக்குதல்களைத் தடுத்து நிறுத்த உரிய அழுத்தம் கொடுக்குமாறு நாம் வேண்டுகிறோம். பாடசாலைகள், மக்கள் வாழும் இடங்கள், பொது இடங்கள் என அனைத்து இடங்களிலும் இராணுவத்தினரின் இந்த வன்முறையானது அதிகரித்துச் செல்கிறது மக்களுக்கு எதிரான வன்முறைகளை சிறிலங்கா இராணுவம் உடனே நிறுத்த வேண்டும்.இப்படியான மோசமான சூழ்நிலையில் பொறுமையிழந்த நிலையில் விரக்தியுடன் தமிழ்மக்கள் உள்ளனர். அமைதியை விரும்புகிற தமிழ் மக்களின் வாழ்க்கையில் இயல்பு வாழ்க்கையை மீளக் கொண்டு இராணுவத்தையும் இராணுவத் தடைகளையும் விலக்க சர்வதேச சமூகம் தார்மீக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்துக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள நிலையில் தமிழர் தாயகத்தில் அமைதி நிலவ அர்த்தமுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தங்களை வேண்டு கிறோம்.

## யாழ்.இல்....

தாக்குதல் நடத்தப்பட்டது.

காங்கேசன்துறையிலிருந்து யாழ்ப்பாணம் 51 ஆம் டிவிசனுக்கு படையினரை இந்த இராணுவ வாகனம் ஏற்றிவந்தது. மறைவிடம் ஒன்றிலிருந்து அடையாளம் தெரியாத நபர்கள் அடங்கிய குழுவினர் தாக்குதல் நடத்தினர்.

இராணுவத்தினரும் பதில் தாக்குதல் நடத்தினர். இந்தத் துப்பாக்கிச் சண்டை ஐந்து நிமிடநேரம் நீடித்தது. தாக்குதலையடுத்து காங்கேசன் துறை வீதியூடாகச் சென்ற பொதுமக்களை இராணுவத்தினர் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கினர்.

தேவரட்ணம் மகேஸ்வரன் (வயது-31),பிரான்சிஸ் சேவியர் அனுஸ்டன் (வயது-28),நிசாந்தன் (வயது-28),கே.தெய்வேந்திரம் (வயது-39), ஆகியோர் இராணுவத்தினரின் தாக்குதலில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தட்டாதெருச்சந்தி, மனோகரா திரையரங்கு சந்திகள் மற்றும் ஐந்துசந்தி ஆகிய பகுதிகளில் அனைத்துப் போக்குவரத்துப் பாதைகளையும் இராணுவம் முடக்கியுள்ளனர்.

கோப்பாய் பிரதேச செயலக கட்டடம் அருகே இராணுவத்தினர் மீது மாலை 4.00 மணியளவில் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.

இந்தத் தாக்குதலைத்தொடர்ந்து அப்பகுதியில் வீதியூடாகச் சென்று கொண்டிருந்த ரூபன் ஜெயந்தன் (வயது-26) என்ற இளைஞரை இராணுவத்தினர் கடுமையாகத் தாக்கியுள்ளனர். படுகாயமடைந்த ரூபன் ஜெயந்தன், யாழ்.மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பலாலிவீதி கந்தர்மடம் சந்தியில் பிற்பகல் 1.00 மணியளவில் படையினர் மீது நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலில் சிறிலங்காப் பொலிசார் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். அவர் பலாலி இராணுவ மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டடுள்ளார்.

அச்சுவேலி பேருந்து நிலையத்தடியில் சிறிலங்கா இராணுவத்தினர்மீது கைக்குண்டு வீசப்பட்டது. இதில் படையினர் ஒருவர் காயமடைந்தார். யாழ்.நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயிலடியில் சிறிலங்காப் படையினர் மீது கைக்குண்டு வீசப்பட்டது. அடையாளம் தெரியாத நபர்களால் வீசப்பட்ட இக் கைக்குண்டு வெடித்ததில் இரண்டு இராணுவத்தினர் படுகாயமடைந்தனர். இவர்கள் பலாலி இராணுவ மருத்துவமனைக்குச் கொண்டு செல்லப்பட்டனர்.

யாழ்.நாச்சிமார் கோயிலடி கோப்பாய்,அரியாலை ஆகிய பகுதிகளில் கைக்குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

அதிகாலை 5.30 மணிக்கு வடமராட்சி நெல்லியடி மத்திய கல்லூரிக்கு அண்மையில் கிளைமோர்க்குண்டுத் தாக்குதலில் இருந்து சிறிலங்கா இராணுவ வாகனத் தப்பியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் தொடரும் தாக்குதல்களையடுத்து கந்தர்மடம், அரசடி, ஐந்துசந்திப்பகுதிகளில் மேலதிக படையினரும் பொலிசாரும் குவிக்கப்பட்டு பாரிய தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். வீதிகளில் செல்லும் பொதுமக்களையும் வாகனத்தில் செல்வோரையும் படைத்தரப்பினர் கடும் சோதனைகளுக்குள்ளாகி தாக்கியுள்ளனர்.

மேலும் சுற்றுக்காவல் நடவடிக்கைகளையும் சிறிலங்கா இராணுவத்தினர் யாழ்.குடாநாடு முழுவதும் தீவிரப்படுத்தியுள்ளனர்.

கோப்பாய் சிறிலங்கா பொலிசார் மீது நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் நான்குபொலிசார் படுகாயமடைந்தனர்.

மல்லாகம் நாவலர் இராணுவ முகாம்மீது நேற்றுமுன்தினம்மிரவு கைக்குண்டு வீசப்பட்டது. இதில்படைத்தரப்புக்கு சேதமில்லை என்று படைத்தரப்பு தெரிவிக்கின்றது.

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்திற்கு அருகாமையில் காவல்கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் மீது கைக்குண்டுத்தாக்குதலும் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று இரவு 8.15 மணியளவில் இந்தத் தாக்குதல் சம்பவம் நடைபெற்றுள்ளது. இதனை அடுத்து அப்பகுதி மீது படையினர் சரமாரியாகத் துப்பாகிப் பிரயோகம் மேற்கொண்ட அதேவேளை அப்பகுதிக்கு 100 மீற்றர் தொலைவில் உள்ள கோழிக்கடை என்னும் பகுதியில் உள்ள இராணுவமும் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.இதேவேளை இதன் போது இராணுவத்தினருக்கு ஏற்பட்ட விபரம் தெரியவரவில்லை.

(28,கா,33,27)

## சாவு அறிவித்தல்



### நாட்டுப்பற்றாளர்
### கிருஸ்ணர் நவரட்ணம்
### (J.P)

சமாதான நீதவான்
வீடமைப்புத்திட்ட உத்தியோகத்தர் யாழ்.மாவட்டம்.
தேசிய எழுச்சிப்பேரவைச் செயலாளர்
யாழ்.மாவட்டம்.

யாழ்ப்பாணம் 432/2 மடம் வீதியைச் சேர்ந்த கிருஸ்ணர் நவரட்ணம் 22.12.2005 வியாழக்கிழமை அகாலச்சாவடைந்தார். அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி கிருஸ்ணன் கனகம்மா தம்பதிகளின் இளைய மகனும், பவளத்தின் அன்புக்கணவரும், துரைசிங்கம், தர்மகுலசிங்கம், ஜோகலிங்கம், தேவபாலன்,தனபாலன், குமரகுரு(போராளி சேரலாதன்/வீரய்ஜா, ஆகியோரின் அன்புச்சகோதரரும், சந்திரா, ஜெயராணி,லதா,சுதா, கலாநிதி, திலகேஸ்வரி ஆகியோரது அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (23.12.2005) வெள்ளிக்கிழமை பகல் 12.00 மணிக்கு யாழ்.செம்மணி கோம்பயன் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*தகவல்: –*
*தம்பி–குமரகுரு,*
*(போராளி சேரலாதன்/வீரய்ஜா)*

(சி.13597)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.